**கவனிக்க.-** *09.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1750 - 2012 මාර්තු මස 16 වැනි සිකුරාදා - 2012.03.16

*1750 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 64 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *பண்டு பண்டாரநாயக்க ஹெல ஜன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, சனவரி 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, பெப்புருவரி 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34474
மாகாண காணி ஆணையாளரின்
இலக்கம் : இகொ/இ/6/மனகு/தீ. ப./2-1.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், மனகுமுக்கடவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 612ஏ ஆடிகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஆடிகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற அலுவலர் பி. எம். சிரிசேன என்பவரினால் வரையப்பட்ட கிடத்தட்டச்சரியான வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01, 02, 03 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 04 ஏக்கர் 03 றூட் 32 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியைச் சிறுவர் இல்லம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு இலங்கை பருக் சிறுவர் இல்லம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| வடக்கு | : | பி. கே. பெரேரா என்பவரின் காணி மற்றும் பிரதான வீதிக்கான ஒதுக்கு ; |
| கிழக்கு | : | பிரதான வீதிக்கான ஒதுக்கு மற்றும் குறுக்கிடும் பாதைக்கான ஒதுக்கு ; |
| தெற்கு | : | கே. டி. சுமனாவதி என்பவரின் காணி மற்றும் குறிக்கிடும் பாதைக்கான ஒதுக்கு ; |
| மேற்கு | : | பி. குலதுங்க பெரேரா என்பவரின் காணி. |

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) குத்தகைக் காலம்.- முப்பது (30) வருடங்கள் (2012.02.06 தொடக்கம்) ;

(ஆ) வருடாந்தக் குத்தகை.- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அங்கீகரிக்கும் வருடத்தின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2 வீதம் வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சிறுவர் இல்லம் அமைக்கும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ப்ரசாதி உபயசிரி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012.

3-693

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/33940
மாகாண காணி ஆணையாளரின்
இல. : இகொ/12/கா/பல./தீ. ப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், பலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 16ஏ பெலாகஸ்பலாத கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பெலாகஸ்பலாத எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஜிஏ/பிஎல்பி/09/125 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் பி எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0740 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளது மான அரச காணியை ஆரண்ய சேனாசனய ஒன்றை நிர்மாணித்துப் பேணும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு

அஹுங்கல்ல பிரியதர்மாசில் மாதா மற்றும் திருமதிகள் ஹபராதுவ லியனகே அனுஷா கயானி, ஜி. ஜி. இந்திரானி, யமுனா பிரியதர்ஷனி, குமாரி ரத்னாயக்க மற்றும் சிரியாவதி லியனகே ஆகியோர்களை நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்களாகக் கொண்ட சிரி விவேகாராம சேனாசன சமிதி விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:
காணித்துண்டு 'பி'

| | |
|---|---|
| வடக்கு | : பி. பி. கா 366 இல் காணித்துண்டுகள் இலக்கங்கள் 29, 30 மற்றும் காணித்துண்டு இலக்கம் ஏ ; |
| கிழக்கு | : காணித்துண்டு இலக்கம் ஏ மற்றும் பி. பி. கா 366 இல் காணித்துண்டு இலக்கம் 30; |
| தெற்கு | : பி. பி. கா 366 இல் காணித்துண்டு இலக்கம் 30 ; |
| மேற்கு | : பி. பி. கா 366 இல் காணித்துண்டுகள் இலக்கங்கள் 30 மற்றும் 29. |

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த 2012.01.30 ஆந் திகதியிலிருந்து 30 வருடங்கள் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- காணியின் 2012 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணியில் ஆரண்ய சேனாசனயவுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டப்பட்டு பூர்த்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காகவன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) உத்தேசக் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிதி திரட்டுதலை நிர்வகிக்கும் உரிமை பௌத்த விவகார ஆணையாளருக்குரிய தாகும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரரினால் காணி வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

(ஏ) பிரதேச செயலாளரின் எழுத்திலான அனுமதியின்றி காணியில் உள்ள மரம் செடிகளை அழிக்கவோ வெட்டவோ கூடாது.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012.02.23.

3-715

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/26010
மாகாண காணி ஆணையாளரின்
இல. : ஈபி/28/எல்ஈஎஸ்/ரிஆர்ஐ/ரிஜி/196.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அபயபுர 244 என் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த லவ்லேன் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்ீ வி பி 29 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 1721 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0655 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளது மான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி கனக்க ஹேவகே சுமனசீலி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| வடக்கு | : காணித்துண்டு இலக்கம் 1722 ; |
| கிழக்கு | : காணித்துண்டுகள் இலக்கங்கள் 1722, 1301 (பாதை) 310 (பாதை), 311 பாதை - எப்ீவிபி 28 ; |
| தெற்கு | : காணித்துண்டுகள் இலக்கங்கள் 1301 (பாதை) 310 (பாதை) 311 (பாதை) மற்றும் 1772 (பாதை) ; |
| மேற்கு | : காணித்துண்டு இலக்கம் 1722. |

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியனி 4% வருடாந்தக் குத்தயைாகக் கொடுபடல் வேண்டும் ;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012.02.23.

3-716

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/26006
மாகாண காணி ஆணையாளரின்
இல. : என்சிபி/பிஎல்சி/6/10/4.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், பட்டனமும் மற்றும் சூழல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 243 ஒ பூம்புகார் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பாலயுத்து எனும் கிராமத்தில் / நகரில் அமைந்துள்ளதும் எப்f விஜி 15 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2330 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0258 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 2334 மற்றும் 2329 ;
கிழக்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 2329 மற்றும் 2223 ;
தெற்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 2223 மற்றும் 2337 ;
மேற்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 2337, 2336 மற்றும் 2331.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் குத்தகையை அங்கீகரிக்கும் திகதி தொடக்கம்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய மாண்புமிகு அமைச்சர் குத்தகையை அங்கீகரிக்கும் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியனி 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும் ;

தவணைப்பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2012.02.23.

3-717

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.